பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 18 வியாழக்கிழமை 02.01.2025 கதிர் 056

## இனிது ரகசியம் அல்ல!

அடுத்துவரும் வாரங்களில் தெற்கில்அரசியல்வாதிகள்நால்வரும் அரசியல்வாதிஒருவரின்மனைவியும் கைது செய்யப்படுவார்கள் என்று கூறப்படுகின்றது. ☞2

# இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பால் எதிர்காலத்தில் பொருளாதார ஆபத்து

## எச்சரிக்கிறார் மீன்பிடித்துறை அமைச்சர்



இந்திய மீனவர்களின் அழிவுகரமான ஆக்கிரமிப்பினால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு எதிர்காலத்தில் பெரும்ஆபத்துஏற்படும்-என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதற்குப் பின்னர் மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுடன் எந்தப் பேச்சும் இல்லை. அனைத்து பேச்சுக்களும் முடிந்து விட்டன. இதன் பின்னர் எவருடனும்பேச்சுநடக்காது கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளுக்கும்இந்திய அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுகள் தொடரும்.தொழில்நுட்பம், தொழில்சார் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் மாத்திரமே இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

வடபகுதிமீனவர்களின்வாழ்வாதாரத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் சட்டவிரோத ☞2

## நாமல் குமாரவுக்கு விளக்கமறியல்

சமூக செயற்பாட்டாளரான நாமல் குமாரவை ஜனவரி 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறுநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று பிற்பகல் நாமல் குமார கைது செய்யப்பட்டார். கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினிடம்வாக்குமூலம்வழங்குவதற்காக வந்த போதே அவர் கைது செய்யப்பட்டார். பொலிஸார் அவரைக் கொழும்பு கோட்டை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் ☞2

## நெல்லுக்கான உத்தரவாத விலை விரைவில் அறிவிப்பு

எதிர்வரும் நாட்களில் நெல்லுக்கான புதிய உத்தரவாத விலை அறிவிக்கப் படவுள்ளதாகஆளும்தரப்புத்தெரிவிக்கிறது.

விவசாயம் மற்றும் கால்நடை வளத்துறை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன இதனைத் தெரிவித்தார்.

உர நிவாரணம் வழங்கப்படாத விவசாயிகளுக்கு இந்த வாரத்திற்குள் அதனைப் பெற்று கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்தபெரும்போகம்தொடங்குவதற்கு முன்னரே விவசாயிகள் உர மானியம் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சுங்கத்துறைக்குக் கடந்தாண்டு ரூ. 1.5 ட்ரில்லியன் வருமானம்

இலங்கை சுங்கத்துறை கடந்த வருடத்தில்1.5ட்ரில்லியன்ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை பதிவு செய்துள்ளது.

இதன்படி, கடந்த வருடம் 1.515 இலட்சம் கோடி ரூபா வருமானம் பதிவாகியுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளரும், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட தெரிவித்தார்.

வருடமொன்றில் இலங்கை சுங்கத்தால் ஈட்டப்பட்ட அதிகூடிய வருமானம் இதுவாகும்.

2024ஆம் ஆண்டுக்காக ஆளும்தரப்புவழங்கிய1.533இலட்சம் கோடி ரூபா வருமான இலக்கை இலங்கைசுங்கம்அடையமுடிந்துள்ளதாகவும் அருக்கொட தெரிவித்தார்.

ஆளும்தரப்பின் வரிக் கொள்கை, இறக்குமதியின் அளவு அதிகரிப்பு மற்றும்சுங்கமுகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் வரி அறவீடு நடவடிக்கையின் வினைத்திறன் என்பன இந்த வெற்றியில் தாக்கம் செலுத்தியுள்ளதாக இலங்கை சுங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## வாகன உதிரிப்பாகங்களை கடத்திவந்து பொருத்தி விற்கும் கும்பல் கண்டுபிடிப்பு

### சந்தேகநபர் ஒருவரும் கைது

சட்டவிரோதமான முறையில் வாகனங்களை உதிரிப்பாகங்களாகக் கொண்டு வந்து இலங்கையில் அவற்றைப்பொருத்திவந்தகும்பலொன்றைகுற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கண்டுபிடித்துள்ளனர். அவர்களில் முக்கிய சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

மாத்தளை பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் குற்றப் புலனாய்வுதிணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர்வசம்இருந்த8அசெம்பிள்செய்யப்பட்டவாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். இலக்கத் தகடுடன் குறித்த வாகனங்களின் செஸி ☞2

## தமிழ்நாட்டுக்கு கப்பல் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

தமிழகத்தின் நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறைக்கானபயணிகள்கப்பல் போக்குவரத்து இன்று முதல் மீண்டும் தொடங்கவுள்ளது.

சீரற்றகாலநிலைகாரணமாகக்இந்தக் கப்பல் சேவை வருட இறுதி மாதங்களில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. காலநிலை சீராகி வருவதால் கப்பல் போக்குவரத்தைமீண்டும்ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக்கப்பல்நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பொன்னுசாமி சுந்தர்ராஜ் தெரிவித்தார்.

இந்த சேவை வாரத்திற்கு 6 நாட்கள் நடக்கும் ☞8

## அநுரவின் 'தூய ஸ்ரீ லங்கா' திட்டம் ஆழமான யோசனையுடன்கூடியது

### முன்னாள் கிரிக்கெட் வீரர் சங்ககார பாராட்டு

'தூய ஸ்ரீ லங்கா' என்பதை எளிமையாக விளக்கினாலும் அது மிகவும் ஆழமான யோசனையுடன் கூடிய செயலாகும் என இலங்கை கிரிக்கெட்அணியின்முன்னாள்தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்கவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் இந்த தேசிய வேலைத்திட்டத்தின் ☞2

### கிளீன் ஸ்ரீ லங்கா போன்று

## இனப்பிரச்சினையையும் கிளீன் செய்யட்டும் அநுர

### சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

அநுர அரசு கிளீன் ஸ்ரீ லங்கா போன்றுஇனப்பிரச்சினையையும் கிளீன் செய்ய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். ☞2

## போக்குவரத்து விதி மீறல்களை தடுக்கப் புதிய செயலி அறிமுகம்

'தூய ஸ்ரீலங்கா' திட்டத்துடன் இணைந்து,இலங்கைபொலிஸாரினால் ஈட்ரபிக் (ETraffic) என்ற கையடக்க தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தில் நடந்த நிகழ்வில் பதில் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவினால் இந்த செயலி நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ☞2

### அரசியல் தலைவர்களும் அரச பணியாளர்களும்

## மக்களுக்குப் பொறுப்புக்கூறக்கூடிய உன்னத சேவையைத் தாருங்கள்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

குறுகிய பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பும்தேசியப்பணிக்கு ஆயத்தமாகும் அதேவேளை, வெளிப்படைத்தன்மையுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூறக்கூடிய உன்னத சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்எனஎதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர், புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்தாவது:

குறுகிய பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் தேசியப் பணிக்கு ஆயத்தமாக வேண்டும். வெளிப்படைத்தன்மையுடன்நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூறக்கூடிய உன்னத சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் தலைவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் ஒன்றிணைந்து இதனை ஒரு பொறுப்பாகவும் கடமையாகவும் கருதவேண்டும்.

சாதாரணமக்களுக்குமுன்னுரிமைவழங்குவதன் மூலம் உன்னத, நேரிய பயனுள்ள பொதுச் சேவையைவழங்குதல்போலவேநெறிமுறைகளைப் பேணுவதுடன், பொதுச் சொத்துக்கள் ☞8

### புலமைப் பரிசில் பரீட்சை விவகாரம்

## பரீட்சார்த்திகள் அனைவருக்கும் 3 வினாகளுக்கு இலவசப் புள்ளி

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளின் முன்கூட்டியே வெளியான மூன்று வினாக்களுக்கும், அனைத்துபரீட்சார்த்திகளுக்கும் இலவச மதிப்பெண்களை வழங்கதீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பரீட்சைக்கு முன்னதாகவே கசிந்தமூன்றுவினாக்களுக்கும் அனைத்துப்பரீட்சார்த்திகளுக்கும் இலவசமாக மதிப்பெண்களை வழங்குவதற்கு உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பல்வேறு மோசடிகள் மற்றும் ஊழல் வழக்குகளுடன் தொடர்புபட்ட இவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்து மக்களை ஏமாற்றியதாக ஏற்கனவே முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தப் பின்னணியில் முன்னாள் அமைச்சர் ஒருவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கைது செய்யப்படுபவர்கள் பட்டியலில் அடங்கியிருக்கின்றனர்என்றுகூறப்படுகின்றது.

இதேவேளை, நாட்டின் வளங்களைச் சுரண்டினார்கள் என்கிற குற்றசாட்டின் கீழ் 10 பேர் மீது வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும் (சிஐடி) இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவும் தயாராகி வருகின்றன என்றும் கூறப்படுகின்றது. இந்த வழக்குகளில் மிக் போர் விமானங்களை வாங்கியதில் இடம்பெற்றதாகக்கூறப்படும்முறைகேடுகளும் அடங்கும்.

........................................

''கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை முடக்குவதற்குத் திரைமறைவில் சதி முயற்சிகளைமேற்கொண்டுவருகின்றார்கள். அவர்களே எனது தலைவர் பதவியைப் பிடுங்குவதில் குறியாக இருந்தார்கள்" என்று திருவாய் மலர்ந்திருப்பர் வேறுயாருமல்லர், சாட்சாத் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாவேதான்.

அவர்கட்சியின்தலைமைப்பதவியிலிருந்து விலகியதாக கட்சி ஏற்றுக்கொண்டது குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோது இவ்வாறு குமுறியிருக்கிறார் அவர்.

"குறுக்கு வழியில் தமிழரசுக் கட்சிக்குள் நுழைந்தவர்கள்,தங்கள்கட்டுப்பாட்டுக்குள்கட்சி இருக்கவேண்டும்என்றுஎண்ணுகின்றார்கள். அவர்களின் சுயநல நடவடிக்கைகளால்தான் எமது கட்சி பலவீனமானது. போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை முடக்க வேண்டும் என்று தென்னிலங்கைவிரும்பியது. ஆனால்,நானும் முன்னாள் தலைவர் சம்பந்தனும் தமிழ் அரசுக் கட்சியைப் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பாதுகாத்தோம். இதெல்லாம் எமது கட்சியைத் தற்போது முடக்க முயலும் சூழ்ச்சிக்காரர்களுக்கு, மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு நன்கு தெரியும்.

தமிழ் அரசுக் கட்சிக்குள் வந்து அரசியல் முகவரி தேடிய இந்தச் சூழ்ச்சிக்காரர்கள், கட்சியை முடக்க முயல்வது அசிங்கமானது. அவர்கள் நன்றி மறந்தவர்கள். அவர்களின் எண்ணம் நிறைவேற நாம் ஒருபோதும் இடமளியோம்'' -என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

அவர் யாரைக் குறிவைத்து இப்படிச் சொல்கிறார் என்பது வாசகர்களுக்குச் சுட்டிக்காட்டிப் புரியவேண்டியதில்லை. மாவையர் இப்போது நன்றி மறந்தவர்கள் என்றுசாடுபவர்கள்இதற்குமுன்னர்அவருக்கு நெருக்கமானவர்களாகத்தான் இருந்தார்கள் என்பதை பதவி பறிபோனதும் அவர் வசதியாக மறந்துவிட்டார். அடுத்த தலைவர் நீங்கள்தான், நீங்கள்தான் என்று அவரை வளர்த்துவிட்டு, ஆசை காட்டிவிட்டு, நீங்கள்தான் கட்சியைப் பொறுப்பேற்கவேண்டும் என்று அவரைக் கொம்பு சீவிவிட்டு இப்போது அந்தக் கொம்பு குத்திக்கிழித்துவிட்டதுஎன்றுகூக்குரலிடுவதில் பயனேதுமில்லை.

அதுவும்போக, அவரும் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர்தான் என்பதையும் அவர் வசதியாக மறந்துவிட்டார். 2020 பொதுத் தேர்தலிலேயே மக்கள் அவரை நிராகரித்துவிட்டார்கள். மக்களால் நிராகரிக்கப்பட்டதன் பின்னரும் 5 வருடங்கள் அவர் கட்சியின் தலைவராக இருந்திருக்கிறார். எனவே மக்களால் நிராகரிக்கப்பட்டவர் என்பது கட்சித் தலைவராக இருப்பதற்கான தகுதிக்குறைவு அல்ல என்பதை அவர் தனக்குத்தானே ஞாபகப்படுத்திக்கொண்டு கருத்துத் தெரிவிப்பதுதான் நல்லது.

....................................

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் பிதா மகன்களில் ஒருவரும் அதன் 14 பேர் தலைமைக்குழுவில்ஒருவருமானசட்டத்தரணி யோதிலிங்கம் தமிழ் அரசுக் கட்சி குறித்து ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து மாவை சேனாதிராசா விலகியதை ஏற்றுக்கொண்டு பதில் தலைவராகச் செயற்படுவதற்கு வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானத்தைக் கட்சி தெரிவு செய்தது தொடர்பிலும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தமிழ் அரசுக் கட்சியிலிருந்துவெளியேறிவேறுகட்சிகளிலும் சுயேச்சைகளிலும் போட்டியிட்டவர்கள் மீதும் கட்சியின் வேட்பாளர்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் மீதும் எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை குறித்தும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதற்கெல்லாம் சுமந்திரன்தான் காரணம் என்றும் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தனக்குச் சார்பான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றநடவடிக்கைகளில்சுமந்திரன் மும்முரமாக இருக்கின்றார் என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். (இது தொடர்பான விரிவான செய்தியை நேற்றைய மாலைக் கதிர் பத்திரிகையில் பார்க்கலாம்)

தமிழ் அரசுக் கட்சி தமிழர்களின் பாரம்பரியமான கட்சி, அதனைப் பலவீனப்படுத்துவது தமிழ் அரசியலைப் பலவீனப்படுத்துவதாகும், எனவே வெளியிலிருந்து அழுத்தம் கொடுத்து அந்தக் கட்சியைப் பாதுகாக்கவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் அரசுக் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை குறித்து அவர் குமுறுவதில் ஒரு நியாயம் இருக்கின்றது என்று ஏற்றுக்கொள்ளலாம். ஏனெனில் இவரும் இவருடன் சேர்ந்த 7 பேருமாக தமிழ்த் தேசியப் பொதுச்சபை என்ற பெயரில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தி அதன் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்அரியநேத்திரனைநியமித்ததுதான் அவர் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவதற்கான காரணம். சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தவர்கள் இவர்கள்தான். இந்த உண்மையை அண்மையில் பொதுக் கட்டமைப்பில் பங்காளியாக இருந்த ஐங்கரநேசனே பகிரங்கமாகக் கூறியிருந்தார். பொதுக் கட்டமைப்பின் பெறுபேறு என்னவென்றால், அரியநேத்திரனைக் கட்சியை விட்டு வெளியேற்றியதும் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட செலவுக் கணக்கு விவரத்தை வழங்காததற்காக வழக்கை எதிர்கொள்வதும்தான்என்றுதெரிவித்திருந்தார். எனவேதங்களால்அரியநேத்திரனுக்குஏற்பட்ட பாதிப்புக்காக யோதிலிங்கம் புலம்புவதில் ஒரு நியாயம் இருக்கலாம்.

ஆனால்,தமிழ்அரசுக்கட்சியின்உள்வீட்டு விவகாரங்களில் கருத்துச் சொல்வதற்கு அவருக்குஎன்னநியாயம்இருக்கின்றதுஎன்பது புரியவில்லை. அவரும் சேர்ந்துகொண்டு உருவாக்கிய பொதுக் கட்டமைப்பில் முக்கிய கட்சியாக இருந்த ரெலோ, அந்தப் பொதுக் கட்டமைப்பு நிறுத்திய ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவாக பணியாற்றாமல் விட்டது குறித்தோ, அந்தக் கட்சியைச் சேர்ந்த விந்தன் கட்சியின் போக்குக்கு மாறாக பொது வேட்பாளரை ஆதரித்து நின்ற காரணத்தால் பொதுத் தேர்தல் வேட்பாளர் தெரிவில் பழிவாங்கப்பட்டது குறித்தோ, அது குறித்து விந்தன் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் அடிப்படையில் அவரைக் கட்சியைவிட்டு இடைநிறுத்தியது குறித்தோ எந்தவொரு கருத்தையும் இதுவரையில் தெரிவிக்காத யோதிலிங்கம், தமிழ் அரசுக் கட்சி விடயத்தில் மட்டும் எப்படி கருத்துச் சொல்ல முடிகின்றது?

அதுவும்போக, பொதுக்கட்டமைப்பாகதாம் எழுச்சிபெறுகின்றோம்என்றுநினைத்தபோது தமிழ் அரசுக் கட்சியை மக்கள் மத்தியில் பலவீனப்படுத்துவதில் குறியாக இருந்த ஒருவர், அந்தக் கட்சியின் மக்கள் ஆதரவை உடைப்பதன் மூலம் அதனைத் தம்மை நோக்கி பணிந்துவரவைக்க முடியும் என்று கருதிய ஒருவர் எப்படி இப்போது தமிழ் அரசு என்கிற பாரம்பரியக் கட்சி சுமந்திரன் தரப்பினரால் பலவீனப்படுத்தப்படுகின்றது என்று நீலிக்கண்ணீர் வடிக்க முடியும்? அதுவும்போக தமிழ் அரசின் மத்திய செயற்குழுவை கட்டுப்படுத்த சுமந்திரன் முயற்சிக்கவில்லை, அது கடந்த பல வருடங்களாகவே அவரது சொற்படி அல்லது நியாயத்தின்படிதான் நடந்து வருகின்றது என்பதையும் இப்போது அவர் வசதியாக மறந்துவிட்டிருக்கின்றார் என்பதையும் அவருக்குநினைவூட்டவேண்டியிருக்கின்றது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## இந்திய ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மீன்பிடி முறைகளால் கடனில் இருந்து மீள முடியாமல் தவித்து வரும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் அச்சம் எழுந்துள்ளது. டிசெம்பர் நடுப்பகுதியில் புதுடில்லியில் இந்தியப் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பின் போது, இருநாட்டுத் தலைவர்களும் கடற்றொழில் பிரச்சினையை முக்கியமானது என அடையாளப்படுத்தியிருந்தனர்.

மீனவர்களின்பிரச்சினைக்குமனிதாபிமான முறையில்தீர்வுகாணவேண்டும்எனநாங்கள் கலந்துரையாடினோம் என இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியுடன் நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார். மனிதாபிமான உதவிகளை வழங்குவது அல்லது பெறுவது தொடர்பில் பேச்சு நடத்தப்படமாட்டாது. மனிதாபிமான உதவிகளை வழங்குவதா அல்லது பெறுவதா என்பது குறித்து நாங்கள் பேச்சு நடத்தப் போவதில்லை.

ஜனாதிபதியின்முதலாவதுஉத்தியோகபூர்வ இந்தியப்பயணத்தின்போது,இருநாடுகளுக்கும் இடையில் கடற்றொழிலார் பிரச்சினை தொடர்பாக நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் தீர்மானங்கள் குறித்து நாட்டுக்கு தெளிவானதகவல்கள்வழங்கப்படாமையால், வடபகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்ந்தும் நீடிக்குமென கவலையடைந்திருந்தனர்.

தமிழ்நாட்டுமுதலமைச்சருடன்இணைந்து அமைதியானதீர்வைஎட்டுவதற்குநடவடிக்கை எடுக்குமாறு வடக்கிலுள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடம் மீனவர் தலைவர்கள் வலியுறுத்தியிருந்தனர். இந்திய மீனவர்கள் வட கடலில் மீன்பிடியில் ஈடுபடுவது ஆக்கிரமிப்பாகும். இந்திய மீனவர்களின் வருகையை தடுத்து நிறுத்தாவிட்டால் நாம் தற்கொலை செய்து கொள்வோம் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

கடலைச் சுரண்டும் இழுவைமடி மீன்பிடி இந்தியாவிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இதே வார்த்தையை இந்திய தூதுவரிடமும் கூட நான் தெரிவித்துள்ளேன். அது மாத்திரம் அல்ல, இந்த இழுவைப் படகுகள் என்பது இந்தியாவிலும்தடைசெய்யப்பட்டுள்ளது.அவை இந்தியாவிலும் தடை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இந்தியாவில் இருக்கின்ற மீனவர்கள்கூட இதற்கு வன்மையான எதிர்ப்பை தெரிவித்திருக்கின்றார்கள். இலங்கைகடற்பரப்பில்இந்திய மீனவர்களின் அழிவுகரமான ஆக்கிரமிப்பினால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு எதிர்காலத்தில் பெரும் ஆபத்து ஏற்படும் - என்றார்.

## நாமல்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் சமூக ஊடகங்களில் பரவிவரும் குரல் பதிவு தொடர்பாக சமூக செயற்பாட்டாளர் நாமல்குமார கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாகன....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(Chassis) எண்கள் மாற்றப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

கைப்பற்றப்பட்டவற்றுள் 6 வாகனங்கள் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதாகவும் இரண்டுவாகனங்கள்பழுதடைந்தநிலையில் காணப்படுகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பிலியந்தலை பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு வாகனம் தொடர்பிலும் அவர் தகவல் வெளியிட்டார். அதன் செஸி எண் மற்றும் இயந்திரங்கள் அனைத்தும் மாற்றப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந்த வாகன விற்பனையில் சந்தேகநபருடன் வலையமைப்பொன்று இயங்கி வருவதாகவும், நிதி நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் நபர் ஒருவரும் அதில் அடங்குகிறார் என்றும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

பொருத்தப்பட்ட வாகனங்களைக் கொள்வனவு செய்பவர்களுக்கு கடன் வசதி செய்து கொடுப்பவராக இந்த நிதி நிறுவனப் பணியாளர் இந்தக்குழுவில்செயற்பட்டுள்ளார் என்கின்றனர் பொலிஸார்.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி 5 கோடி ரூபாவுக்கும் அதிகமாகும். சந்தேகநபர் மஹர நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து ஜனவரி 6 வரைவிளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளார்.

## பரீட்சார்த்திகள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்துக்கு அமைவாக குறித்த பரீட்சையின் விடைத்தாள்களை திருத்தும் பணிகள் விரைந்து ஆரம்பிக்கப்படவுள்ளன என்றார்.

## அநுரவின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்க நிகழ்வில் கலந்து கொண்ட போதே சங்கக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'கிளீன் ஸ்ரீ லங்கா' தேசிய செயற்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இலங்கை அணியின் இரண்டு முன்னாள் தலைவர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த சங்கக்கார, இந்த வேலைத் திட்டம் காலத்திற்கேற்ற முக்கியமான செயலாகும் என்றார்.

''மனநிலையை மாற்றி, அன்றாட வாழ்க்கையிலும் நிர்வாகத்திலும் நல்ல மதிப்புகள் மற்றும் கொள்கைகளைச் சேர்ப்பது நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் வளர்ச்சிக்கும் பெரும் உதவியாக இருக்கும்" என்றும் அவர் கூறினார்.

"மிக முக்கியமான ஒரு செயலை இன்று தொடங்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். புத்தாண்டின் முதல் நாளில் இது போன்ற ஒரு செயல்முறையைதொடங்குவதுமிகவும்நல்ல விடயம். எளிமையாக விளக்கப்பட்டாலும், இந்த செயல்முறை மிகவும் ஆழமான யோசனையுடன் தொடங்கப்பட்டுள்ளது'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய மஹேல ஜயவர்தன 'கிளீன் ஸ்ரீ லங்கா' என்பது மிகவும் முக்கியமான பணியாகும் என தெரிவித்தார்.

ஜனாதிபதியிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பெரும் பொறுப்பு மக்களுக்கும் உள்ளது என்றார்.

புதிய ஆண்டில் மிக முக்கியமான பணி ஒன்று இருப்பதாக நான் நினைக்கிறேன். ஜனாதிபதி மற்றும் அனைவரின் ஆதரவுடன், 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பெரும் பொறுப்பு குடிமக்களாகிய எமக்கு உள்ளது. நல்ல தொடக்கம். நிறைய இருக்கிறது. செய்ய வேண்டும் - என்றார்.

## இனப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கிளிநொச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

மலர்ந்திருக்கும் புதுவருடம் இன ஒற்றுமையுடன்கூடிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் அவர்களின் இலக்கை அடையும் புதுவருடமாக அமையும் என்ற எதிர்பார்ப்போடுகாலடிஎடுத்துவைக்கின்றோம்.

இலங்கை நாட்டில் வருமானம் தரக்கூடிய பொருளாதாரம் எவையும் இல்லை. பொருந்தோட்ட பொருளாதாரமும் இல்லை. சுற்றுலாப்பயணிகளின் வருகையை மட்டும்தான் பார்த்திருக்கிறார்கள்.

இலங்கை உலக நாடுகள் மற்றும் நாணய நிதியத்திடம்வாங்கியகடனைகட்டுவதென்றால் உடனடி வழிமுறைகூட இல்லை நெல் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் கைத்தொழில் துறையும் எதிர்பார்த்த இலாபத்தை அடையவில்லை இலங்கை அரசாங்கம் கிளீன் சிறிலங்கா போன்று புரையோடிப்போய்யுள்ள இனப்பிரச்சனைக்கும் கிளீன் திட்டத்தை கொண்டு வருவார்களாக இருந்தால் உலகத்திலுள்ள தமிழர்களின் நிதியுடன் வடக்கு கிழக்கில் புதிய அபிவிருத்தியை ஆளும்தரப்பு உருவாக்கத் தயார்.

இதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திலும் ஒரு மாற்றத்தை கொண்டு வரும்வரை இங்குள்ள பல தொழிற்சாலைகள் இயங்க முடியாதுள்ளது. இவற்றை இயக்குவதற்கான பண பலத்தை உலகத் தமிழர்கள் கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# உற்பத்திப் பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் அனைவரும் செயற்படுவோம்

## விஜித்த ஹேரத் திடசங்கற்பம்

பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டை கட்டியெழுப்ப பிறந்திருக்கும் புதுவருடத்தில் அனைவரும் உறுதியுடன் செயற்படுவோம். அதற்காக உற்பத்தி பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

எமது நாடு பொருளாதார ரீதியில் கஷ்ட நிலைமையில் இருக்கிறது. வரலாற்று ரீதியில் எமது கொள்கையில் இருந்து வந்த குறைபாடுகள் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் வீழ்ந்த இடத்தில் இருந்து நாட்டை கட்டியெழுப்ப நாங்கள் உறுதி பூணவேண்டும். நாட்டை கட்டியெழுப்பும் கனவு



எம்மனைவரிடமும் இருக்கவேண்டும். நாட்டை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதாகஇருந்தால்அதற்கான ஸ்திரமான முறைதான் உற்பத்தியை அடிப்படையாகக்கொண்ட பொருளாதாரத்தை நாட்டுக்குள் ஏற்படுத்துவதாகும்.

நாங்கள் இன, மத, அரசியல் ரீதியில் வேறுபட்டு இருந்தாலும் நாட்டை கட்டியெழுப்பும் பணியில் ஒரு குடும்பமாக செயற்பட்ட வேண்டும். ஒரு குடும்பமாக செயற்படும் போது குடும்பத்தின் அபிவிருத்திக்காக ஒரு சில தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்படுகிறது. - என்றார்.

புதுவருடத்தில் அமைச்சின் கடமைகளை நேற்று (புதன் கிழமை) ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மக்களுக்கு அரசு தரவேண்டிய சேவைகளை வழங்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்

## பிரதமர் ஹருணி அழைப்பு

கடந்த சில மாதங்களாக அரச ஊழியர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நாம் நன்றித்தெரிவிக்கிறோம். புதிய வருடத்தில் முன்னரை விட பிரயத்தனங்களுடனும் உற்சாகத்துடனும் மக்களுக்கு அரச சேவையின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட கீளின் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்கு இணைவாக



பிரதமர் அலுவலகத்தில் கடமைகளை ஆரம்பித்த போதே பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

# போதைவஸ்து பயன்பாட்டை கட்டுப்படுத்த நடவடிக்கை

## சொல்கிறார் றஜீவன் எம்.பி.

போதைவஸ்து பயன்பாட்டை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தெரிவித்தார்.

51 படையணியின் மக்கள் தொடர்பு அதிகாரி லெப். கேணல் அனஸ் அகமட்டின் வேண்டுகோளுக்கு இணங்க மக்கள் சந்திப்பு ஒன்று கோப்பாய் செல்வபுரம் பகுதியில் நடைபெற்றது. இதன்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள், இராணுவத்தினர் மக்களுக்கு வழங்கும் உதவிகள் பற்றி விவரித்ததுடன் கிராமத்தில்உள்ளபிரச்சினைகள் பற்றி எடுத்துரைத்தார்கள்.

குறிப்பாக இந்த பகுதியில் போதைவஸ்து பாவனை, கசிப்பு உற்பத்தி போன்வற்றை உடனடியாக கட்டுப்படுத்தி தருமாறு கேட்டுக் கொண்டதுடன், இதனால் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகைள் பற்றி எடுத்துரைத்தார்கள்.

இதனை கேட்டுஅறிந்து கொண்ட, நாடாளுமன்ற உறுப்பினர் இக்கிராமத்தில் உள்ள பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு இருப்பதாகவும், மாணவர்களை பாடசாலைகளுக்கு ஒழுங்காக அனுப்புமாறும், அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அக்கறை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.



# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புதுவருடத்தின் முதல் நாள் நிகழ்கள்

(றமீஸ்)

புதிய வருடத்தின் முதல் நாள் கடமையினை ஆரம்பிக்கும் விஷேட நிகழ்வு நேற்று (புதன்கிஸ்ரீழமை) தென்கிழக்குபல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டு புதிய ஆண்டின் பணிகள் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.



இதன்போது பல்கலைக் கழகத்தின் மூலம் சிறந்த சேவையை வழங்கும் வகையில் பல்கலைக்கழக ஆளணியினரால் சத்தியப் பிரமாண நிகழ்வு இடம்பெற்றதுடன், நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காகவும், பல்கலைக்கழகத்தில் சேவையாற்றி உயிரிழந்தவர்களுக்காகவும் ஆசி வேண்டி இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் இடம்பெற்றன.

இதன்போது பல்கலைக் கழகத்தின் பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர் உள்ளிட்ட பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் துறைசார் ஆளணியினரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அர்ப்பணிப்பும் விடாமுயற்சியும் தேவைப்படும் ஒரு பணி

அரசுத்தலைவரின்வார்த்தைகளில்சொன்னால், ”உடைந்துபோன தேசத்தை மீளக் கட்டியெழுப்புதல்'' என்ற நோக்கத்தோடு 'தூய ஸ்ரீலங்கா' திட்டம் நேற்று ஆண்டின் முதல் நாளில் அரசுப் பணியாளர்களால் உறுதியேற்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை முன்னெடுக்க 18 பேர் கொண்ட செயலணி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்தச் செயலணியால் தன் மீது பூசப்பட்ட பேரினவாதம் என்ற அழுக்கை இன்னும் சுத்தப்படுத்த முடியவில்லை என்பது ஒருபுறம் இருக்க, இந்த பணிக்குழுவின் நியமனம் மற்றும் அதன் நோக்கங்கள் 2024 மார்கழி 19 வெளியான ஒரு சிறப்பு வர்த்தமானி மூலம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அரசுத் தலைவர் அநுரகுமார தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில், ஆளும்தரப்பின் முதன்மையான அபிவிருத்தி இலக்குகளில் கிராமப்புற வறுமையை ஒழித்தல், 'சுத்தமான இலங்கை' முயற்சியை நடைமுறைப்படுத்துதல் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் போன்றவை முக்கியமானவை என்று தெரிவித்திருந்தார். புத்தாண்டுடன் தொடங்கப்பட்டுள்ள 'தூய ஸ்ரீலங்கா' முயற்சியானது, சமூக, சுற்றாடல் மற்றும் நெறிமுறை மறுமலர்ச்சி மூலம் சமூகத்தை மேலும் உயரத்திற்கு உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இருந்தாலும் இது ஒன்றும் புதிய முழக்கமல்ல. இதற்கு முன்னர் கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சியிலும் இதுபோன்ற குரல் ஒலிக்கவே செய்தது. அப்போது அது சுத்தமான நகரமாக ஒலித்தது. நகரங்களே முக்கிய இலக்குகளாக இருந்தன. இதன் கீழ் அழகான யாழ். நகரம் என்கிற திட்டம்கூட முன்மொழியப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணத்தின் திண்மக் கழிவுகளை முறையாக அகற்றுவதற்கும் மீள்சுழற்சி செய்வதற்கும் ஒழுங்கான பொறிமுறையின்றி இதுவரையில் தத்தளிக்கின்றது யாழ்ப்பாணம் மாநகர சபை. தமது பகுதிக்குள் நகரத்தின் கழிவுகளைக் கொண்டு வந்து கொட்டாதீர்கள் என்று வலி. தென்மேற்குப் பிரதேச சபையினர் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார்கள். தலைநகர் கொழும்பிலும்கூட, நகரத்தை அழகாக்குவதில் காட்டப்பட்ட தீவிரம் அதன் குப்பைகளை அகற்றுவதற்கான பொறிமுறையில் காட்டப்படவில்லை. மேல் மாகாணத்தில் காணப்படும் திண்மக்கழிவு முகாமைத்துவ நெருக்கடியை தீர்ப்பதில் சிறிதளவு முன்னேற்றம்கூட காணப்படவில்லை.

இது கடந்த காலங்களில் தூய ஸ்ரீ லங்கா கனவுகளுக்கு இருந்த சவால்களை எடுத்துக்காட்டுகின்றன. தூய்மையான இலங்கைக்காக பாடுபடுவதற்கு ஆளும்தரப்புகள் முயற்சித்தாலும், சில நடைமுறைச் சவால்கள் மற்றும் முரண்பாடுகள் நீக்கப்படவேண்டியிருக்கின்றன என்பதை ஏற்றுத்தானாக வேண்டும். அப்படி ஏற்றுக்கொண்டு அவற்றுக்குத் தீர்வுகாணப்படவில்லை எனில் இதுவும் கடந்த காலங்களைப் போன்ற மற்றொரு திட்டமாகத்தான் கடைசியில் முடியும்.

விரைவாகத் தேவைப்படும் பொருளாதார வளர்ச்சிக்காக வணிகத் திட்டங்களை நிர்மாணிப்பதற்காக அதிக சதுப்பு நிலங்கள் திடக்கழிவுகளால் நிரப்பப்படுவதும் கடந்த காலங்களில் நடந்த அவலங்களில் ஒன்று, இதுபற்றிய விழிப்புணர்வு இன்றியோ சுற்றுச் சூழல் குறித்த அக்கறை இன்றியோ தூய ஸ்ரீலங்காவை உருவாக்கிவிட முடியாது.

கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் சதுப்பு நிலங்கள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு வரும் நிலையில், திண்மக் கழிவு முகாமைத்துவ நெருக்கடியைத் தீர்க்க அரசாங்கம் முயற்சித்து வரும் அதே வேளையில், கொழும்பில் ஒரு காலத்தில் வீதிகளில் இடையூறு ஏற்படுத்திய மரங்கள் தொடர்ந்தும் வெட்டப்பட்டு வருகின்ற நிலையில், தற்போதைய தூய ஸ்ரீலங்கா திட்டம் எதன் மீது கவனம் செலுத்தப்போகின்றது என்ற கேள்வி ஒருவருக்கு எழுவது நியாயமானதே.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்திலும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக பல்வேறு தற்காலிக தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதிலும் அவை பயனற்றவையாகவே காணப்பட்டன. அதில் ஒன்று, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழி (பிளாஸ்டிக்) மற்றும் சாசெட் பாக்கெட்டுகளுக்கு தடை விதிக்கப்பட்டது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இருந்தபோதிலும், அதிகாரிகளின் தரப்பில் மோசமான கண்காணிப்பு மற்றும் சட்ட அமலாக்கம் இருந்தது.

மக்கள் மத்தியில் தார்மீக சமூக நடத்தையை வளர்ப்பதற்காக இதுபோன்ற ஒரு திட்டத்தைத் தொடங்குவதற்கான முயற்சிக்காக ஆளும்தரப்புப் பாராட்டப்பட வேண்டும். அதுநேரம் அந்தத் திட்டம் வெற்றிகரமானதாக அமையவேண்டும் என்கிற அக்கறையையும் கொண்டிருக்கவேண்டியிருக்கின்றது.

ஆளும் தரப்பின் இந்தத் திட்டம் பௌதீகக் குப்பைகளை அகற்றி இலங்கையை தூய்மையாக்குவதை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல என்றே தெரிகிறது. அது மனித மனங்களிலும் தூய்மையை ஏற்படுத்துவதை வேண்டி நிற்கின்றது. குறிப்பாக அரச பணியாளர்களின் மனங்கள் தூய்மையடையவேண்டும் என்று எதிர்பார்ப்பதாகப் படுகின்றது. இந்த நடத்தை மாற்றம் ஓர் இரவிலோ ஒரு ஆட்சிக் காலத்திலோ நிகழ்ந்துவிடக்கூடியதல்ல. சவால் மிக்க இந்தப் பணியில் முன்னேற அர்ப்பணிப்பும் விடாமுயற்சியும் சளைத்துப்போகாத மனமும் தேவை. நல்லதே நடக்கட்டும்.

# இந்தியாவும் சீனாவும் அநுர அரசும்

**உ-புல் யோசப் பெர்னான்டோ**





அநுரகுமார இந்தியாவுக்குப் பயணப்பட்டிருந்தபோது, சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் பிரதித் தலைவர் கின் போயோங் (ஞஷ்ஜ யலிதீலிஜஆ) இலங்கையை வந்தடைந்தார். அநுர இந்தியாவில் இருந்தபோது, கின் இங்கு அமைச்சர்களைச் சந்தித்தபடியே இந்தியாவில் அநுரவின் நடவடிக்கைகளைக் கண்காணித்தார்.

இதேவேளை, அநுராவின் சொந்த ஊரான அநுராதபுரம் தம்புத்தேகமவில், சீன நிதியுதவி திட்டத்திற்கான வைபவம் ஒன்றும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றிய வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க, ஏனைய நாடுகளுடனான இலங்கையின் உறவுகள் அரசுகளுக்கிடையில் இருக்கும்போது, சீனாவுடனான ஜே.வி.பி.யின் உறவு இரண்டு கட்சிகளுக்கிடையிலானது என்றார். ஜே.வி.பி. வேறு எந்த நாட்டுடனும் இதுபோன்ற உறவுகளைப் பேணவில்லை என்று அவர் வலியுறுத்தினார், சீனாவுடனான தொடர்பை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று விவரித்தார். அநுரவின் வர்த்தக அமைச்சர், இந்தியாவில் இல்லாதபோது, அநுரவின் பிறந்த இடத்தில், சீன அதிகாரிகள் முன்னிலையில், இவ்வாறானதொரு பிரகடனத்தை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அநுரா இந்தியாவிலிருந்து திரும்பியதைத் தொடர்ந்து கின் போயோங் அநுரவைச் சந்தித்தார். இலங்கையில் தடைசெய்யப்பட்ட கடல்சார் ஆராய்ச்சியை மீளத் தொடங்க சீனா எதிர்பார்த்துள்ளதாக சந்திப்பின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை அடுத்து, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, சீன ஆராய்ச்சிக்கான தடை தளர்த்தப்படும் எனத் தெரிவித்தார். நளிந்தவின் அறிக்கையைத் தொடர்ந்து, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பொதுப் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்தார்.

கின் போயோங்கின் அறிவிப்புக்குப் பிறகு அந்தச் சந்திப்பு நடந்தது. அதன் பின்னர் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி ஆய்வுக் கப்பல்களுக்கான தடை நீக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். ஒரு நிலையான செயல்பாட்டு நடைமுறை உருவாக்கப்பட்ட பிறகு அது நீக்கப்படும் என்று அவர் கூறினார். வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களை அனுமதிக்க ஆளும்தரப்பு இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் பாதுகாப்புச் செயலாளர் கூறினார்.

முதலில் சீன ஆராய்ச்சிக் கப்பல்களை அனுமதித்த ஆளும்தரப்புப் பின்னர் அதை மாற்றியதை இது காட்டுகிறது. அநுரவின் சீனப் பயணத்திற்கு முன்னர் தடையை நீக்க சீனா விரும்பலாம். இப்போது சீனா பெரும் இக்கட்டான நிலையில் உள்ளது. முதல் வாய்ப்பிலேயே சீனாவிடம் இந்தியா தனது பலத்தை வெளிப்படுத்தி வருகிறது. ஆனால், இந்த ஆளும்தரப்பு என்ன சொல்கிறது, என்ன செய்கிறது என்பதைப் பற்றிய தெளிவான படத்தைப் பெறுவது சீனாவுக்கும் இந்தியாவுக்கும் எளிதானது அல்ல. இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கூறியதற்கும் இப்போது செய்து கொண்டிருப்பதற்கும் பெரிய முரண்பாடு உள்ளது. அவர்கள் சொன்னதை அவர்களே இப்போது மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆளும்தரப்பை நம்பி முடிவெடுப்பது சீனாவுக்கோ இந்தியாக்கோ எளிதல்ல.

இந்தியாவுடனான கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல விடயங்களில் தமக்கு உடன்பாடு இல்லை என இந்தியப் பயணத்தின் பின்னர் ஆளும்தரப்பின் அமைச்சர்கள் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர். இராஜதந்திர அனுபவம் இல்லாத ஓர் ஆளும்தரப்பை எப்படிக் கையாள்வது என்பதற்கு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இதுவொரு நல்ல பாடமாக அமைந்திருக்கிறது

காலைக்கதிர் Kalaikkathir

# சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதில் நீதி அமைச்சுக்கு பெரும் பொறுப்புண்டு

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதி



மக்கள் கோரிய மாற்றத்தை மேற்கொள்வது இந்த அரசாங்கத்தின் பொறுப்பாகும். அந்த மாற்றத்தை ஏற்படுத்தும்போது பாரிய பொறுப்பு அரச ஊழியர்களுக்கே இருக்கிறது. அதனால் பொது மக்களுக்காக நாங்கள் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

புதுவருடத்தில் நீதி மற்றும் ஒருமைப்பாடு அமைச்சின் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு புதன்கிழமை நீதி அமைச்சு வளாகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பல வருடங்களாக மக்கள் எதிர்பார்த்திருந்த மாற்றம் ஏற்பட்டு தற்போது புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்திருக்கிறது. புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டது. புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அரச சேவை புதிதாக நியமிக்கப்படவில்லை. என்றாலும் இந்த அரசாங்கத்தை அதிகாரத்துக்கு கொண்டுவர அரச ஊழியர்கள் பாரியளவில் அர்ப்பணித்தார்கள். தபால் மூல வாக்குகளில் அது தெளிவாகியுள்ளது.

மேலும் சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பதற்கு எமது அமைச்சுக்கு பாரிய பொறுப்பு இருக்கிறது. இந்த அமைச்சில் அமைச்சர், மேலதிக செயலாளர், செயலாளர் என பல்வேறு பதவிகள் இருக்கின்றன. இவை அனைத்தும் உங்களுக்கு சாட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்களே அன்றி கிரீடம் அல்ல. அதனால் எங்கள் அனைவருக்கும் பொறுப்புக்கள் இருக்கின்றன. அவை மாற்றமடைய முடியும். அணியாக செயற்படும்போது அனைவரதும் பொறுப்புக்களும் முக்கியமாகும். அதனால் சிறந்த நோக்கத்துடன் முன்னுக்கு செல்வதற்கு அனைவருக்கும் முடியுமாகட்டும் என பிரார்த்திக்கிறேன். - என்றார்.

# காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சத்தியபிரமாண நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

புதிய ஆண்டின்(2025) அரசாங்க சேவை சத்திய பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று(புதன்கிழமை) காலை 9.00 மணிக்கு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்தியர் தஸ்லீமா வசீர் தலைமையில் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த படைவீரர்களுக்கும் ஏனையவர்களுக்குமாக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கொண்டனர்.





# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் புத்தாண்டுக் கடமைகள் ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன் தலைமையில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தமது புதுவருட கடமைகளை ஆரம்பித்தனர்.

காலை 8.30 மணிக்கு தேசியக்கொடி யேற்றலுடன் நாட்டுக்காக உயிர்நீத்த அனைவரையும் நினைவுகூரும் முகமாக இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்திலிருந்து ஒளி ஃ ஒலி பரப்பப்படும் 'கிளீன் ஸ்ரீலங்கா' நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் தேசிய விழாவுடன் உத்தியோகத்தர்கள் இணைந்து கொண்டனர்.113







# வவுனியா மாவட்ட செயலகத்தில் 'க்ளீன் ஸ்ரீ லங்கா' உறுதியுரை

தேசிய ரீதியில் இவ்வாண்டு முதலாம் திகதி முதல் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திடம் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்கான உறுதியுரையை எடுத்துக் கொண்டனர்.

முன்னதாக மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, தேசிய கொடியினை ஏற்றி வைத்ததுடன், பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதத்தலைவர்களும் ஆசியுரைகளும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திற்கான உறுதியுரை அரச உத்தியோகத்தர்கள் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர், உதவி மாவட்ட செயலாளர், திணைக்கள தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

100







# வடக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்து 499 வர்த்தகர்கள் நுகர்வோர் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கை

2024 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 3499 வர்த்தகர்களிற்கு எதிராக 02 கோடியே 58 இலட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் வடமாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஐக்வார் சாதிக் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (புதன்கிழமை) கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வட மாகாணத்தில் 3445 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 3361 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 744 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 903 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. 946 வர்த்தகர்களிற்கு வவுனியா நீதிமன்றத்தின் ஊடாக 57 லட்சத்து 48 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 100

# மீனவர்கள் பிரச்சினை குறித்து ஜனாதிபதியுடன் பேசுவதற்கு கடற்றொழில் அமைப்புகள் திட்டம்

வட பகுதி மீனவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை ஜனவரி மாத இறுதியில் சந்தித்துப் பேசுவதற்கு கடற்றொழிலாளர் அமைப்புகள் தீர்மானித்துள்ளன. அதேவேளையில் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரையும் இவ்வமைப்புகள் சந்தித்துப் பேசவுள்ளன.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்திற்கும், வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்திற்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே இது தொடர்பான தீமானம் எடுக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் கடற்றொழில் அமைச்சால் முன்மொழியப்படவுள்ள புதிய சட்டமூலத்தை இடைநிறுத்தல், தமிழக அரசியல் தலைமைகளுடன் வடக்கு கிழக்கு தமிழ் பிரதிநிதிகள் பேச்சு முன்னெடுப்பதை வலியுறுத்தல், தேசிய மக்கள் சக்தியால் மீனவர் பிரச்சினை தொடர்பில் கோரப்பட்ட கால அவகாசம் ஜனவரி மாதத்துடன் நிறைவடைதல், 2025 ஆண்டில் வடமாகாண மீனவர்களின் வாழ்வியல் செயற்திட்டங்கள், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவை சந்திப்பதற்கான தீர்மானம் போன்ற விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

கடற்றொழில் அமைச்சா'இராமலிங்கம் சந்திரசேகர் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை தம்மைச் சந்திப்பதற்காக நேரம் ஒதுக்கிகொடுத்திருப்பதாக வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் மொகமட் ஆலம் தெரிவித்தாஜ¯;.

இந்தச் சந்திப்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஏமன் குமார, வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் ஜோசப் பிரான்சிஸ், இணையத்தின் செயலாளர் மொகமட் ஆலம், இணையத்தின் பொருளாளர் ரவீந்திரன் பிரியா, ஊடக பேச்சாளர் அ.அன்னராசா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்ட மீனவ சங்க பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## புத்தாண்டை வாண வேடிக்கையால் வரவேற்ற கொழும்பு துறைமுக நகரம்

2025 ஆம் ஆண்டு ஆங்கில புத்தாண்டை வாணவேடிக்கையுடன் கொழும்பு துறைமுக நகரம் (போர்ட் சிட்டி) வரவேற்றது.

கொழும்பு துறைமுக நகரத்தில் உள்ள மெரினா பாலத்திற்கு மேலே பிரமாண்டமான வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன.

இதேவேளை, காலி முகத்திடல் மற்றும் கொழும்பு நகரத்தை சுற்றியுள்ள ஹோட்டல்களில் வண்ணமயமான வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன.



## பேருந்துக் கட்டணக் குறைப்பு தொலைதூரக் கனவு மட்டுமே

### இப்படிக் கூறுகிறார் கெமுனு



பேருந்துக்கட்டணக்குறைப்பு என்பது தொலைதூர கனவாக மாறியுள்ளது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை குறைப்பு குறித்த அரசாங்கத்தின் தீர்மானங்களால் பஸ் கட்டண குறைப்பு என்ற மக்களின் எதிர்பார்ப்பு தொலைதூர கனவாகியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் பஸ் கட்டணங்கள் குறையும் என மக்கள் எதிர்பார்த்தார்கள் இந்தவருட ஆரம்பத்தில் எரிபொருள் விலைகள் குறையும் என எதிர்பார்த்தோம்ஃ ஆனால் தற்போது அது கனவாக மாறியுள்ளது என கெமுனு விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டணங்களை குறைக்கவேண்டும் என்றால் எரிபொருள்களின் விலைகளை 30 ரூபாவால் குறைக்கவேண்டும் என தெரிவித்துள்ள அவர் அதேவேளை எரிபொருள் விலைகளை மாத்திரமல்ல உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் விலைகளையும் குறைக்கவேண்டும், தனியார் பஸ் சேவை மிகவும் நெருக்கடியான நிலையில் உள்ளது. எங்கள் செலவீனங்களை சமாளிப்பதற்காக ஜ¬லைக்குபின்னர் பஸ் கட்டணங்களை அதிகரிக்கவேண்டியிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நிதி அமைச்சில் புத்தாண்டு நிகழ்வு

புத்தாண்டு பணிகளை ஆரம்பித்து வைத்து தூய்மையான இலங்கை உறுதிமொழி வழங்கும் நிகழ்வு நேற்று (புதன்கிழமை) நிதியமைச்சில் செயலாளர் மகிந்த சிறிவர்தன தலைமையில் இடம்பெற்றது.

கருவூல துணைச் செயலாளர்கள், துறைகளின் இயக்குநர் ஜெனரல்கள் மற்றும் பிற அதிகாரிகளும் கலந்துக்கொண்டனர்.

அதன் பின்னர் நடைபெற்ற தேநீர் விருந்தில் பிரதி அமைச்சர்களான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# மன்னார் மறைமாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி

மன்னார் மறைமாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி கடும் மழைக்கு மத்தியில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை இரவு 11.45 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

இதன்போது திருப்பலியின் ஆலயத்திற்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

மேலும் குறித்த திருப்பலியில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஓட்டமாவடி அரபா நகர், மஜ்மா நகர் பகுதிகளுக்கு உடனடியாக குடிநீர் வழங்க நடவடிக்கை எடுங்கள்

## ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை

மட்டக்களப்பு அரபா நகர், மஜ்மா நகர்பிரதேசமக்களுக்குஇதுவரைகுடிநீர் வசதி கிடைக்கவில்லையெனவும், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை சந்திவெளி திட்டம் நிறைவடைந்தவுடன் குடிநீர் வழப்படும் எனவும் உறுதி வழங்கியிருந்தனர். ஆனால் தற்போது சந்திவெளி நீர் திட்டம் முடிவடைந்த நிலையிலும் அந்த கிராம மக்களுக்கு குடிநீர் வசதி செய்துகொடுக்கப்படவில்லை. இவற்றை கருத்திற்கொண்டு உடனடியாக குடிநீர் வசதிகளை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் வேண்டுகோள் விடுத்தார்.

திங்கட்கிழமை நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்திலேயே எம்.எஸ்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தார்.

இதற்கு பதிலளித்த நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மாவட்ட பிராந்திய பொறியியலாளர் -

தற்போது சந்திவெளி குடிநீர் திட்டம் நிறைவடைந்தாலும் குடிநீர் பாசிக்குடா ஹோட்டல்களுக்கு வழங்கப்படுவதால் நீரின் அழுத்தம் போதாமையால் குடிநீரை இப்பிரதேச மக்களுக்கு வழங்க முடியாமல் இருப்பதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ், இக்கிராம மக்களுக்கு கிணற்றிலிருந்தும் கூட நீரைப் பெற முடியாத நிலை காணப்படுகிறது.

மக்களுக்குநீர்வசதிகளைவழங்குவது உங்களது கடமை, உடனடியாக இந்த கிராமங்களுக்கு குடீநீர் வழங்குங்கள் என தெரிவித்ததையடுத்து மாவட்ட அபிவிருத்திகுழு இதனை ஏற்றுக்கொண்டு இக்கிராம மக்களுக்கு உடனடியாக குடிநீர் வசதிகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மாவட்ட பிராந்திய பொறியியலாளருக்கு பணிப்புரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கடமை ஏற்றார்

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்ட இலங்கை நிருவாக சேவை அதிகாரி எஸ். பார்த்தீபன் நேற்று (புதன்கிழமை) தனது கடமைகளை கல்லடியில் உள்ள அலுவலகத்தில் பொறுப்பேற்றார்.

2015 ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவைக்கான திறந்த போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட இவர் இந்நியமனத்தை பொறுப்பேற்கமுன்னர் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக செயற்பட்டார். கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் உதவி செயலாளர், கிழக்கு மாகாண கூட்டுறவு பிரதி ஆணையாளர் ஆகிய பதவிகளையும் இவர் வகித்துள்ளார்.



# வடக்கு மாகாண ஆளுநருடன் பலாலி வான்படை தளபதி சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகத்தை, பலாலி விமானப்படைத்தளபதி குறூப் கப்டன் குமாரசிறி சம்பிரதாயபூர்மாக நேற்று (புதன்கிழமை) காலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

புத்தாண்டு வாழ்த்துக்களை இருவரும் பரிமாறிக்கொண்டதுடன், எதிர்காலத்தில் தொடர்ந்து சந்தித்துப் பேசுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.







## இனப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னதான் இருந்தாலும் எண்பது ஆண்டுகளாகவுள்ள இனப்பிரச்சினைக்கு இதயசுத்தியுடன் ஒரு தீர்வை அடையாளம் காண்பார்களாயின் அதிலும் இந்த அரசு இதை காணுமாயின் அது ஒரு புதிய மாற்றத்தை இலங்கைக்கு கொடுக்கும் சிங்கள மதகுமார்களிடமும் சிங்கள மக்களிடமும் தற்போதும் இனப்பிரச்சனை விடயத்தில் பௌத்த இதிகாசங்களோடே வாழ்கின்றனர்.

இவற்றிலிருந்து வெளியே வரவேண்டும் பொலிஸ், காணி அதிகாரங்களை தந்து நாங்கள்சுயாட்சியாகவாழவழிவிடவேண்டும் எப்பொழுதும் சமாதானமாக பேசுவதற்கு எங்களுடையசமாதானகதவுகள்எப்பொழுதும் திறந்திருக்கும் என தெரிவித்தார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும், ஒரு சுற்றுக்கான போக்குவரத்து பயணச்சீட்டு செலவாக இலங்கை ரூபாவில் 35,000 நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் கப்பல் உரிமையாளர்; தெரிவித்தார்.

## போக்குவரத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலி மூலம் பொதுமக்கள், போக்குவரத்து விதிமீறல்கள் குறித்து உடனடியாக முறைப்பாடு தெரிவிக்கலாம்.

இலங்கை பொலிஸின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.police.lk ஊடாக Eservices பகுதிக்குள் நுழைவதன் மூலம் ஈட்ரபிக் செயலியை உங்கள் கையடக்கத் தொலைபேசியில் இலகுவாகப் பதிவிறக்கம் செய்ய முடியும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் செயலி ஊடாக பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை உடனடியாகப் பொலிஸ் தலைமையகத்திற்கு அனுப்பிவைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கிய 607 பொலிஸ் நிலையங்களில் போக்குவரத்து அதிகாரிகள் கடமையாற்றுவதுடன், இந்த செயலியை அறிமுகப்படுத்துவதன் மூலம் தினசரி வாகன விபத்துக்களை குறைப்பதற்கு பொதுமக்களின் ஆதரவைப் பெறமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த செயலியில் உள்ள கமராவை (Camera option icon) அல்லது வீடியோவை (Video option icon)ஐப் பயன்படுத்துவதன் மூலம், போக்குவரத்து விதிமீறல்கள் மற்றும் வீதிகளில் இடம்பெறும் பிற சம்பவங்கள் தொடர்பான ஒளிப்படங்கள் மற்றும் வீடியோக்களை இந்த கணக்கு மூலம் பொலிஸ் தலைமையகத்திற்கு அனுப்ப முடியும்.

இவ்வாறு வழங்கப்பட்ட தகவல்களின்படி, போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் மற்றும் பிற சம்பவங்களை விசாரணை செய்து, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொலிஸ் பிரிவுகளுக்கு அனுப்புவதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை மேற்கொள்ளும். விசாரணைகளின் முன்னேற்றத்தை பொலிஸ் தலைமையகம் கண்காணிக்கும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## மக்களுக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வளங்களை துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கக் கூடாது.

நாட்டுக்கு செயல் திறமையோடு வினைத்திறனான சேவையை ஆற்ற வேண்டும். தனிநபர் இலாபத்தை விட நாட்டு மக்களின் நலனுக்காக கூட்டாக செயற்பட ஒன்றிணைய வேண்டும் என்றார்.

# சட்டத்தை மீறி வியாபாரம் செய்தோருக்கு கடந்த ஆண்டு 2.5 கோடி ரூபாய் தண்டம்

## பாவனையாளர் அதிகார சபை அறிவிப்பு

2024 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 3,499 வர்த்தகர்களிற்கு எதிராக நீதிமன்றங்களின் ஊடாக 2 கோடியே 58 இலட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்தார்.

குறிப்பாக வடமாகாணத்தில் 3445 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 3361 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வவுனியா மாவட்டத்தில் 744 சுற்றுவளைப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் 903 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டதுடன், 946 வர்தகர்களிற்கு வவுனியா நீதிமன்றத்தின் ஊடாக 57 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரிசி விற்பனை தொடர்பான வடமாகாணத்தில் 774 விசேட சுற்றுவளைப்புக்கள் மேற்கொள்பட்டுள்ளதுடன், வவுனியா மாவட்டத்தில் 126 விசேட சுற்றிவளைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

### தொல்லியல் திணைக்களத்தால்

# காணி கையகப்படுத்தப்படுவதற்கு குச்சவெளி மக்கள் கடும் எதிர்ப்பு

தொல்லியல் திணைக்களத்தால் காணிகள் கையகப் படுத்தும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று (புதன்கிழமை) காலை மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் தொல்லியல் சின்னங்கள் இல்லாத தனியாருக்கு சொந்தமான காணிகளையும், பிரதேச சபைக்கு சொந்தமான காணிகளையும் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அப்பகுதி மக்கள் நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது 'புதைபொருள் திணைக்களமே குச்சவெளி சந்தைக்கட்டட காணியை புதைக்காதே, 'தொல்பொருள் திணைக்களமே குச்சவெளி நெற்களஞ்சிய கட்டடத் திற்கு தொல்லை தராதே', 'தொல்பொருள் அதிகாரிகளே சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களிடையே வேற்றுமையை உண்டாக்காதே' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோசங்களையும் எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். குறித்த ஆர்ப்பாட்டத்தில் குச்சவெளி கிராம சங்கங்கள், பொதுமக்கள் மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் கலந்து கொண்டிருந்தார்கள்.

குறித்த காணிகளை கையகப்படுத்தும் முகமாக அப்பகுதிகளில் எவ்வித அறிவித்தலும் இன்றி இரவோடு இரவாக பெயர்ப்பலகையை காட்சிப்படுத்தியுள்ளதாகவும் இந்த காணிகளில் தொல்லியல் சின்னங்கள் எவையும் இல்லாத நிலையில் தொல்லியல் திணைக்களம் இந்த காணிகளை கையகப்படுத்த முயற்சிப்பதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் பிரதேசசபைக்குச் சொந்தமான 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் கடைத்தொகுதிகளுடன் காணப்பட்ட பகுதியும் மற்றுமொரு இடத்தில் நெற் களஞ்சியமாக காணப்பட்ட பழைய கட்டடங்களுடன் கூடிய பகுதியையும் தொல்லியலுக்குரிய இடமாக கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதனால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் இதை அனுமதிக்க முடியாது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த சட்ட விரோதமான செயற்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குச்சவெளி பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் மற்றும்






அரசியல்வாதிகளிடமும் இது தொடர்பான மகஜர்களை கையளிக்கவுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் இது தொடர்பாக தொல்லியல் திணைக்கள் திருகோணமலை மாவட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் இது தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகத்தினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது எனவும் அவர்களுடன் கலந்தாலோசித்து தீர்வை பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.




# மக்களுக்குச் செய்யும் சேவை இறைவனுக்குச் செய்வதாகும்

## வடக்கு மாகாண ஆளுநர் அரச பணியாளர்களுக்கு அறிவுரை



எங்கள் மக்களுக்கு நாங்கள் செய்யவேண்டிய சேவைகள் ஏராளம் இருக்கின்றன. அவற்றைப் பொறுப்புணர்ந்து செய்வதற்கு அரச பணியாளர்கள் ஒவ்வொருவரும் இந்தப் புதிய ஆண்டில் உறுதிபூணுவோம். மக்களுக்குச் செய்யும் சேவை இறைவனுக்குச் செய்யும் சேவை என்று வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் வேதநாயகன் தெரிவித்தார்.

அவர், 2025ஆம் ஆண்டுக்கான அரச கடமைகளைத் தொடங்கும் நிகழ்வில் நேற்று ஆளுநர் செயலகத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

அரச பணியாளர்கள் முதல்நாள் கடமைகளைத் தொடங்கும் அரச சேவை உறுதிமொழியெடுக்கும் நிகழ்வை வடக்கு மாகாண ஆளுநர் தேசியக் கொடி ஏற்றி வைத்து தொடக்கி வைத்தார். தொடர்ந்து வடக்கு மாகாண சபையின் கொடியை வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் நந்தகோபாலன் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து, உத்தியோகத்தர்கள் அனைவரும் 'தூய இலங்கை' திட்டத்துடன் இணைக்கப்பட்ட உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தலைமையில் நடைபெற்ற 'தூய இலங்கை' தேசிய வேலைத் திட்டத்தின் தொடக்க நிகழ்விலும் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஆளுநர் செயலக பணியாளர்கள் நேரலை ஊடக இணைந்திருந்தனர்.

நிகழ்வு முடிவடைந்த பின்னர் ஆளுநர் செயலகப் பணியாளர்கள் மத்தியில் ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் நீங்கள் ஒவ்வொருவரும் செயலாற்றவேண்டும். மக்களின் கோரிக்கைகளை அலைக்கழித்து, தட்டிக்கழிக்கவேண்டாம். அரச அலுவலகங்களுக்குச் சென்றால் தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் கட்டியெழுப்புங்கள். கடந்த காலங்களில் அரசியல் அழுத்தங்களால் - தலையீடுகளால் உங்களின் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சில குழப்பங்கள் - தடங்கல்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் தற்போதைய ஆளும்தரப்பின் காலத்தில் அவ்வாறான நிலைமைகள் நிச்சயம் உங்களுக்கு ஏற்படாது.

தற்போதைய ஆளும்தரப்பு ஊழல், இலஞ்சம் அற்ற அரச சேவையையே எதிர்பார்க்கின்றது. அதை நாங்கள் வழங்கவேண்டும். ஆளும்தரப்பின் இலக்கு வெற்றியடைய நாங்கள் ஒவ்வொருவரும் உழைக்கவேண்டும். மக்களுக்குச் சேவை செய்வதற்காகத்தான் நாங்கள் ஒவ்வொருவரும் இருக்கின்றோம். மக்களுக்கு செய்யும் சேவை இறைவனுக்குச் செய்யும் சேவைக்கு ஒப்பானது என்றார்.

# மகேஸ்வரனின் நினைவேந்தல் நேற்று மானிப்பாயில் நடந்தது

முன்னாள் இந்துகலாச்சார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய தியாகராஜா மகேஸ்வரனின் 17 வது நினைவேந்தல் யாழ் இணுவில் பகுதியில் உள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் மானிப்பாய் தொகுதி காரியாலயத்தில் ஐக்கியதேசியக்கட்சியின் யாழ் கிளிநொச்சி மாவட்டங்களின் தலைமைக்காரியாலயத்தின் ஏற்பாட்டில் நேற்று மாலை நடைபெற்றது

2008 ஜனவரி முதலாம் நாள் கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேச்சரர் ஆலயத்தில் ஆங்கிலபுத்தாண்டு பூசை வழிபாடுகளில் ஈடுபடச் சென்ற போது ஆயுததாரிகளால் மகேஸ்வரன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்

1990 ஆண்டில் இருந்து ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து அரசியல் பயணத்தில் ஈடுபட்டவர் அவர்.

அவரது 16 ஆவது நினைவு நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட தொகுதிகளின் அமைப்பாளர்கள் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# அரச அச்சக இணையம் வழமைக்குத் திரும்பியது

சைபர் தாக்குதல் காரணமாக தற்காலிகமாக செயலிழந்திருந்த அரச அச்சுத்திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மீண்டும் வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

சைபர் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

இதனிடையே சைபர் தாக்குதலுக்குள்ளான பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ ஹுழரவுரபுந தளமும் வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ ஹுழரவுரபுந தளம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் மீதான சைபர் தாக்குதல் தொடர்பில் கணினி குற்றத்தடுப்பு பிரிவு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

# இரணைமடு வலது கரையில் 5 நாள்களாக நிற்கும் யானை

## காயத்துடன் அவதிப்படுவதாக மக்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் வலது கரைப்பகுதியில் கடந்த சனிக்கிழமை முதல் இந்த யானை காணப்படுகின்றது. அதன் காலில் காயம் ஏற்பட்டுள்ளதாக யானையை நேரில் பார்த்த பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வன உயிரிகள் திணைக்களத்திற்கு அறிவித்து அவர்கள் இரண்டு தடவைகள் வந்து பார்வையிட்டபோதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஐந்து நாட்கள் கடந்த நிலையில் தொடர்ந்து யானைகாயத்துடன் குறித்த பகுதியில் சஞ்சரித்து நிற்பதால் தம்மால் குளத்தில் மீனிபிடிக்க முடியவில்லை என்று வலைத் தொழிலுக்குச் செல்பவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தரை தொடர்பு கொண்ட போது இது தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்கள வடமாகாணத்திற்கு பொறுப்பான வைத்தியருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

113



# முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் 2025ஆம் ஆண்டிற்கான அரச கடமைகள் ஆரம்ப நாள்

(ஸாகிர்)





கிளீன் ஸ்ரீ லங்கா தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக 2025 ஆம் வருடத்தில் அரச கடமைகளை ஆரம்பம் செய்யும் அரசாங்க சேவை சத்தியபிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று (புதன்கிழமை) காலை 8.30 மணிக்கு திணைக்கள வளாகத்தில் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தலைமையில் நடைபெற்றது.

சமூக நல்லிணக்கம், ஒற்றுமை, தேசிய நலன், அபிவிருத்தி, முன்மாதிரியாகச் செயற்படல் மற்றும் கூட்டுப் பொறுப்பு என்பனவற்றினூடாக மாற்றத்தை ஏற்படுத்தல் என்ற நோக்கத்தை மையப்படுத்தி இந்த கடமை ஆரம்ப நாள் நிகழ்வு அமையப் பெற்றது.

மேலும் இந்நிகழ்வில், நாட்டுக்காக உயிர்தியாகம் செய்த அனைவருக்காகவும் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக க்ளீன் சிறி லங்கா வேலை திட்டத்தின் ஆரம்ப நாள் நிகழ்வு நேரலையாக ஒளிபரப்புச் செய்யப்பட்டதுடன் சத்தியப்பிரமாண நிகழ்வும் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில், இந்து மற்றும் கிறிஸ்தவ திணைக்களங்களின் பணிப்பாளர்கள் உட்பட அனைத்துத் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# மலையக மக்கள் முன்னணியின் மறுசீரமைப்புப் பணி தொடக்கம்

## தை பிறந்த கையோடு என்கிறார் இராதாகிருஷ்ணன் எம்.பி.

(கிஷாந்தன்)

தை பிறந்த கையோடு மலையக மக்கள் முன்னணியில் மறுசீரமைப்பு நடவடிக்கை ஆரம்பமாகும் என்று மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானவே.இராதாகிருஸ்ணன்தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனின் 15ஆவது சிரார்த்த தினம், 01.01.2025 அன்று மதியம் 2 மணிக்கு, ஹற்றனில் மலையக மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின்தலைவரும்நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னணியின் பிரதி தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம், முன்னணியின் செயலாளர் நாயகம் எஸ்.விஜயசந்திரன், மலையக தொழிலாளர் முன்னணியின் பொது செயலாளர் புஷ்பா விஷ்வநாதன், நிதி செயலாளர் தாளமுத்து சுதாகரன் உள்ளிட்ட ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மேடையில் வைக்கப்பட்டிருந்த அமரர் பெ.சந்திரசேகரனின் உருவப்படத்திற்கு முதல் மலர் மாலையை முன்னணியின் தலைவரும் எம்.பியுமான வே.இராதாகிருஷ்ணன் அணிவித்தார்.

இதனையடுத்து அதிதிகள் நினைவுச்சுடர் ஏற்றியதுடன், அங்கு கலந்துகொண்ட பொதுமக்களும் நினைவுச்சுடர்களை ஏற்றியமையும் குறிப்பிடதக்கது.

இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

மலையக மக்கள் முன்னணி தனித்துவமான கட்சியாகும். அக்கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டும் என மக்கள் தரப்பினரிடமிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமைய விசேட குழு ஒன்றை அமைத்திருந்தோம்.

அந்த குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைக்களுக்கமைய எதிர்வரும் பொங்கலுக்கு பின்னர் மறுசீரமைப்பு பணி இடம்பெறும்.

அத்துடன், உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பிலும் அவதானம் செலுத்தியுள்ளோம். அத்தேர்தலை மலையக மக்கள் முன்னணி தனித்து எதிர்கொள்ள வேண்டும் என கட்சி உறுப்பினர்கள் சிலர் வேண்டுக்கோள் விடுத்துள்ளனர்.

அந்த கோரிக்கைகள் குறித்தும் பரிசீலித்து வருகின்றோம். நாடாளுமன்ற தேர்தலில் சில மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டது. நவரெலியா மாவட்டத்தில் சிந்தித்து வாக்களித்திருந்தால் இன்னும் இரு தமிழ் பிரதிநிதிகளை தெரிவு செய்திருக்கலாம். எனவே, உள்ளூராட்சி சபை தேர்தலை உரிய வகையில் தமிழ் மக்கள் கையாள வேண்டும். - என்றார்.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.01.2025இல் வெளியிடப்பெற்றது